செ. கு. எண்:117 நாள் :21.08.2016

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 21.8.2016

6.6.2016 அன்று கடலூர் மாவட்டம், பண்ருட்டி போக்குவரத்துப் பிரிவு காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்த திரு. துரை;

8.6.2016 அன்று கடலூர் மாவட்டம், துறைமுகம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்த திரு. G.மோகன்தாஸ்;

9.6.2016 அன்று திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் போக்குவரத்துப் பிரிவு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணி புரிந்த திரு. S.முருகன்;

25.6.2016 அன்று வேலூர் மாவட்ட ஆயுதப்படை வாகனப் பிரிவில் இரண்டாம் நிலைக் காவலராகப் பணி புரிந்த திரு. N.நவீன்;

28.6.2016 அன்று மதுரை மாவட்டம், கொட்டாம்பட்டி காவல் நிலையத்தில் முதல் நிலைக் காவலராகப் பணி புரிந்த திரு. இளையராஜு;

30.6.2016 அன்று திருவண்ணாமலை மாவட்டம், போளூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணி புரிந்த திரு. சீ.குப்புசாமி;

3.7.2016 அன்று சென்னை பெருநகர காவல், ஓட்டேரி காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்த திரு. D.பிரபாகரன்;

4.7.2016 அன்று வேலூர் காவலர் பயிற்சி பள்ளியில் உதவி ஆய்வாளராகப் பணி புரிந்த திருமதி செல்லம்மாள்;

8.7.2016 அன்று ஈரோடு மாவட்டம், சித்தோடு காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்த திரு. S.கதிர்வேல்;

சென்னை பெருநகர காவல், அண்ணா சாலை காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்த திரு. V.நாகராஜன்;

–– ஆகியோர் உடல்நலக் குறைவால் காலமானார்கள் என்ற செய்தியையும்;

10.6.2016 அன்று விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம், தமிழ்நாடு சிறப்பு காவல் படை 11-ம் அணியில் உதவி ஆய்வாளராகப் பணி புரிந்த திரு. R.இளங்கோ;

9.6.2016 அன்று தமிழ்நாடு சிறப்புக் காவல் படை 4-ம் அணி, "சி" நிறுமத்தில் இரண்டாம் நிலைக் காவலராகப் பணி புரிந்த திரு. M.ரஞ்சித்குமார்;

2.7.2016 அன்று தூத்துக்குடி மாவட்டம், சாயர்புரம் காவல் நிலையத்தில் தலைமைக் காவலரரகப் பணி புரிந்த திரு. N.சுப்பையா;

3.7.2016 அன்று திருநெல்வேலி மாவட்டம், கூடங்குளம் காவல் நிலையத்தில் முதல் நிலைக் காவலராகப் பணி புரிந்த திரு. முருகன்;

–– ஆகியோர் சாலை விபத்துகளில் உயிரிழந்தனர் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

பல்வேறு நிகழ்வுகளில் மேற்கண்ட தேதிகளில் உயிரிழந்த இந்த **14** காவலர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**